**செய்தி வெளியீடு எண்:100** **நாள்: 20.02.2017**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்</u>**

- **கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நடப்பாண்டில் 15.2.2017 வரை 6,31,137 விவசாயிகளுக்கு ரூ.3509.49 கோடி பயிர்க்கடன்.**
- **நடப்பாண்டில் ரூ.369.58 கோடி அளவிற்கு உரம் விற்பனை.**
- **பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ரூ.62.54 கோடி அளவிற்கு காய்கறிகள் விற்பனை. அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.456.56 கோடி மதிப்பில் மருந்துகள் விற்பனை.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (20.2.2017) தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது: முன்னாள் **முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலன் கருதி சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த கடன்கள் தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், ரூ.5318.73 கோடியிலான பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் நீண்டகால பண்ணை சார்ந்த கடன் ஆகிய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு 12,02,075 விவசாயிகளுக்கு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவதற்கும் நடப்பு நிதியாண்டில் 15.2.2017 வரை 6,31,137 விவசாயிகளுக்கு ரூ.3,509.49 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 78,581 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.380.37 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடன் தள்ளுபடி பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் உடனுக்குடன் பயிர்க்கடன்கள் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

புழக்கத்திலிருந்த ரூ.500 மற்றும் ரூ.1,000 நோட்டுகள் செல்லாது என்ற இந்திய அரசின் அறிவிப்பாலும் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலாலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளில் ஒன்றான பயிர்க்கடன் வழங்குதலில் தொய்வு ஏற்பட்டது. இருப்பினும், பயிர்க்கடன் வழங்குதலை எளிதாக்கும் வகையில் பயிர்க்கடனுக்கான ரொக்க தொகையை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகள் மூலம் பட்டுவாடா செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இதன்படி 23.11.2016 முதல் 17.2.2017 வரை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகள் மூலம் 2,91,420 விவசாய உறுப்பினர்களுக்கு கணக்குகள் துவங்கி, ரூ.1,027.60 கோடி அளவிற்கு ரொக்கமாக வழங்கப்பட்டுள்ளது. ரூ.10.38 கோடி அளவிற்கு பயிர் காப்பீட்டு தொகையினை (crop insurance premium) விவசாயிகளின் பயிர்க்கடன் கணக்கில் பற்று வைத்து தொடர்புடைய காப்பீடு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களான உரம், விதைகள் ஆகியன ரூ.117.55 கோடி அளவிற்கு 1,64,830 விவசாய உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் 813 கிளைகளில் கணக்கு வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் கைபேசியிலேயே குறுஞ்செய்தி (SMS) மூலம் தகவல் அனுப்பும் வசதி 31.3.2017க்குள் அளிக்கப்படவேண்டும் என்றும், கூட்டுறவுச் சங்கங்களில் கடன்பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் ரூபே KCC கடன் அட்டைகள் வழங்கும் திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு ஏதுவாக நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள்.

கூட்டுறவுத்துறை வாயிலாக தமிழ்நாட்டில் 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை மூலம் 2016–17ம் ஆண்டில் ரூ.369.58 கோடி மதிப்பில் 2,97,776 மெ.டன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் விளைவித்த பொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து தேவையின்போது இலாபகரமாக விற்று வருவாயை பெருக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3,879 சேமிப்பு கிடங்குகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது ரூ.109.89 கோடி மதிப்பில் 98,800 மெ.டன் கொள்ளளவு கொண்ட 562 கிடங்குகள் கட்டும் பணி நடைபெற்று வருவதில், 143 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் **முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உன்னத திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 16.2.2017 வரை 22378 மெ.டன் காய்கறிகள் ரூ.62.54 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான 106 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 293 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.456.56 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கும் பொருட்டு விலையில்லா அரிசி, பொதுவிநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் 1.80 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரும்பணியினை கூட்டுறவுத் துறை சார்ந்த 32,685 நியாயவிலைக் கடைகள் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் முறையாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முழுமையாக சென்றடையும் வகையிலும், கூட்டுறவு நியாயவிலைக்கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்படுவதை உறுதி செய்திடவும், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதை உறுதி செய்துக் கொள்ளுமாறும், தவறு செய்யும் பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் முனைவர் க.இராஜேந்திரன், திரு.ஆர்.ராமலிங்கம், திருமதி ஆர்.பிருந்தா, திரு.பா.பாலமுருகன், டாக்டர் ந.வில்வசேகரன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர், திருமதி எஸ். செந்தமிழ்ச்செல்வி, திருமதி வீ.தேவகி மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**